2012 ஏப்ரல் 12]

மாவட்டத்திற்கான ஆட்டுப் பண்ணையை தன்னகத்தே கொண்டுள்ள, கால்நடைகள் அதிகம் நிறைந்த பகுதியான சாத்தூர் தொகுதிக்கு, சாத்தூர் ஒன்றியம் படந்தாலிலும், வேம்பக்கோட்டை ஒன்றியம் சிப்பிப்பாறையிலும் கால்நடை மருந்தகங்களை அமைத்திடவும், மேலும் அனைத்து மாவட்டங்களிலும் இயங்காமல் உள்ள, குறிப்பாக விருதுநகர் மாவட்டத்தில் இல்லாமல் இருக்கிற நடமாடும் கால்நடை மருந்தகத்தை இயக்கச் செய்யவும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2012–2013 ஆம் ஆண்டுக்கு புதிதாக 20 கால்நடை மருந்தகங்களையும், 50 புதிய கால்நடை துணை மருத்துவமனைகளையும் அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே உங்களுடைய பகுதியை ஆய்வு செய்து, முடியும் என்று சொன்னால், நிச்சயமாக அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

86—

மின்சார உற்பத்திப் பிரிவு

*__4674__—**திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும் மின்சார உற்பத்திப் பிரிவு தொடங்கி மக்களின் தேவைகளுக்கு மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னால் ஆய்வு செய்கின்றபோது அந்த இணை மின் உற்பத்தி நிலையத்தில் வேகமாக பணிகளைச் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த வகையிலே 12 ஆலைகளிலே 183 மெகா வாட் மின்சாரம் தயாரிப்பதற்குண்டான பணி நடைபெற்று வருகிறது. வருகின்ற டிசம்பர் மாதம் முதல் பிப்ரவரி மாதத்திற்குள் இந்தப் பணிகள் முடிந்து, 183 மெகா வாட் மின்சாரம் அதாவது முழு உற்பத்தியையும் தொடங்கும் என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 8 நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கக்கூடிய சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைத்து, (குறுக்கீடு)* related*–ஆக வருகிறேன். இந்தக் கேள்விக்கு* related*–ஆகக் கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. பாபு முருகவேல், நீங்கள் ஒரு வழக்கறிஞர். எப்படி ஒரு* case*–ஐ* present *செய்ய வேண்டுமென்று நான் உங்களுக்குச் சொல்லித் தரத் தேவையில்லை. மூலக் கேள்வி* electricity generation *சம்பந்தமானது. எனவே,* generation *சம்பந்தமாக துணைக் கேள்வி கேளுங்கள். தயவு செய்து வேறு* issue*–விற்குப் போகாதீர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறிலே உள்ள சர்க்கரை ஆலையிலே இந்த ஆண்டிலே மட்டும் 76 இலட்சத்து 97 ஆயிரத்து, 177 யூனிட் மின்சாரம் தயாரித்து, தங்களுடைய தேவைகளுக்குப் போக, 34 இலட்சத்து, 61 ஆயிரத்து 540 யூனிட்டுகள் அரசுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இதேபோல அனைத்து சர்க்கரை ஆலைகளிலுமே மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடியபட்சத்தில் மிகப் பெரிய அளவிலே மின் உற்பத்தி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கிடைக்கும். எனவே, அந்த வேலையை மீண்டும் துரிதப்படுத்தி, தலைஞாயிறு கூட்டுறவு*

2012 ஏப்ரல் 12]

சர்க்கரை ஆலையிலும், N.P.K.R.R. மில்லிலேயும் இதைத் துரிதப்படுத்த வேண்டும். தமிழகத்தில் இருக்கக்கூடிய 16 சர்க்கரை ஆலைகளில், 3 சர்க்கரை ஆலைகளிலே மட்டும்தான் தங்களது தேவைகளுக்குப் போக, மீதமுள்ள மின்சாரத்தை அரசுக்கு வழங்குகிறார்கள். எனவே, மீதமுள்ள சர்க்கரை ஆலைகளிலும், அதுபோல் மின் உற்பத்தியைத் துரிதப்படுத்தி அரசுக்கு வழங்கக்கூடிய வகையிலே மிகப் பெரிய அளவிலே மின்சார உற்பத்தியினை செய்யக்கூடிய திறனை அரசு அதிகரிக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் உள்ள 12 ஆலைகளில் 183 மெகா வாட் மின்சாரம் தயாரிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த இணை மின்சார உற்பத்தி நிலையம் தொடங்கி மின்சார வாரியத்திற்கு மின்சாரம் வழங்கினால், அந்த சர்க்கரை ஆலைகள் இலாபகரமாக இயங்கும் என்ற எண்ணத்திலேதான் இந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கடந்த 2010 ஆம் ஆண்டு இதற்காக MoU போட்டார்கள். அதற்குப் பிறகு நிதி ஒதுக்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இப்போது அதனை ஆய்வு செய்து அதற்கான நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். இப்போதுதான் பணிகள் துவங்கி வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 2011 செப்டம்பரில் இப்பணிகள் முடிக்கப்பட்டிருக்க வேண்டும். கடந்த கால ஆட்சியில் நிதி ஒதுக்கவில்லை, ஒதுக்காத காரணத்தால் பணிகள் நடைபெறாமல், தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை ஏற்கெனவே தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனைத்து ஆலைகளிலும் இத்திட்டத்தைத் தொடங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். 12 ஆலைகளில் தற்போது மின்சார உற்பத்திக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. போதிய கரும்புகள், குறைந்தபட்சம் ஒரு ஆலைக்கு 2,000 டன் அளவிற்கு தினந்தோறும் அரைவை இருந்தால்தான் மின்சார உற்பத்தி செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வாறு இல்லாத

6 ஆலைகளில் இத்திட்டம் தொடங்கப்படவில்லை என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

87—

பேருந்து பணிமனை

***5452—திரு. கடம்பூர் ராஜு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, கயத்தாறில் பேருந்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரசுப் போக்குவரத்துக் கழக பணிமனைகள் எங்கெல்லாம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றனவோ, அவற்றிற்கெல்லாம் சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். கோவில்பட்டி தொகுதி, கோவில்பட்டியில் உள்ள பணிமனை 71 பேருந்துகளைக்கொண்டு வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் பணிமனையாகும். தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் 6.01 ஏக்கர் பரப்பளவில் ரூ.70 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிமனை விரைவில் சொந்தக் கட்டடத்தில் இயங்கவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல், கோவில்பட்டி தொகுதி, கயத்தாறில் மிகக் குறைவான அளவிலேதான் பேருந்துகள் உள்ளன. வருங்காலத்தில் பேருந்துகளின் எண்ணிக்கையினை அதிகரித்தபின், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று அங்கு பணிமனை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.